Singapore Examinations and Assessment Board

Singapore–Cambridge General Certificate of Education
Ordinary Level (2026)

# Higher Tamil (Revised)
# உயர்தமிழ்
# (Syllabus 1147)

© MOE 2026

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குரிய பாடத்திட்ட நோக்கங்கள் | 3 |
| மதிப்பீட்டு நோக்கங்கள் | 4 |
| தேர்வு அமைப்புமுறை | 6 |
| தேர்வு விவர அட்டவணை | 8 |
| பிழை திருத்தம் - தேர்வில் சோதிக்கப்படவிருக்கும் இலக்கணக்கூறுகள் | 10 |
| கருத்தறிதல் 1: இலக்கண வினா<br>தேர்வில் சோதிக்கப்படவிருக்கும் இலக்கணக்கூறுகள் | 11 |
| கட்டுரை மதிப்பீட்டுத் திட்டம் | 12 |
| வாய்மொழி மதிப்பீட்டுத் திட்டம் | 16 |

# 1 தமிழ்மொழி கற்றல் கற்பித்தலுக்குரிய பாடத்திட்ட நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட உயர்நிலை வகுப்புகளுக்குரிய தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு அடிப்படை மொழித்திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தலாகும். இவற்றோடு தமிழ் மரபுக் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் மாணவர்களுக்கு நன்கு விளக்குவதோடு நாட்டுருவாக்கத்துக்குத் தேவையான பண்புநலன்களையும் அவர்களிடத்தில் வளர்த்தலாகும். எனவே, உயர்நிலை வகுப்புகளுக்குரிய தமிழ்மொழிப் பாடத்திட்டம் பின்வரும் கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

### 1.1 கேட்டலும் நோக்கலும்

- மாணவர்கள் பல்வகையான கேட்டல் நோக்கல் வளங்களைக் கேட்டும் பார்த்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்

### 1.2 பேசுதல்

- மாணவர்கள் பல்வேறு சூழல்களுக்கேற்பப் பேச்சுத்தமிழிலும் எழுத்துத்தமிழிலும் தெளிவாகவும் சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் பேசுவர்

### 1.3 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மாணவர்கள் சூழலுக்குத் தக்கவாறு பொருத்தமான முறையில் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவர்

### 1.4 படித்தலும் நோக்கலும்

- மாணவர்கள் பல்வகையான பனுவல்களைப் பார்த்தும் படித்தும் தக்க வகையில் புரிந்துணர்வை வெளிப்படுத்துவர்

### 1.5 எழுதுதல்

- மாணவர்கள் சரியான மொழியமைப்புடனும் படைப்பாக்கத் திறனுடனும் தங்கள் கருத்துகளைப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துவர்

### 1.6 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மாணவர்கள் சூழலுக்கேற்பப் பொருத்தமான மொழியமைப்பையும் வடிவத்தையும் பயன்படுத்தி எழுத்துவழியே கருத்துப்பரிமாறிக்கொள்வர்

# 2 மதிப்பீட்டு நோக்கங்கள்

உயர்நிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் கற்றல், கற்பித்தலின் வாயிலாகப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் அடைவுநிலைகளை அடைவதற்குரிய திறன்களைப் பெற்றிருப்பர். இத்திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். கற்றல் அடைவுநிலைகளை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட மதிப்பீட்டு நோக்கங்கள் பின்வருமாறு:

### 2.1 கேட்டல்

- எழுத்து, பேச்சு வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 2.2 பேசுதல்

- கொடுக்கப்படும் தலைப்புக்கு ஏற்ற கருத்துகளைத் தர்க்கரீதியாகப் பொருத்தமான சான்றுகளுடன் தொடர்ச்சியாகவும் நிரல்படவும் எடுத்துரைத்தல்
- செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் கூறுதல்; பொருத்தமான சொல்வளமும் தொடரமைப்பும் கொண்ட மொழிநடையைப் பயன்படுத்துதல்; பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் பேசுதல்

### 2.3 பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்

- கொடுக்கப்படும் தலைப்பையொட்டி ஈடுபாட்டுடன் உரையாடுவதோடு செவிமடுப்போர் புரிந்துகொள்ளுமாறு கருத்துகளைத் தெளிவாகவும் சரளமாகவும் தக்க சான்றுகளுடனும் தன்னம்பிக்கையுடனும் நியாயப்படுத்துதல்
- பொருத்தமான சொல்வளமும் தொடரமைப்பும் கொண்ட மொழிநடையைப் பயன்படுத்துதல்; பேச்சுத்தமிழிலோ எழுத்துத்தமிழிலோ சரியான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனியுடனும் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுதல்

### 2.4 படித்தல்

- பலவகையான பனுவல்களை ஆழ்ந்து படித்துத் தம் புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 2.5 எழுதுதல்

- கொடுக்கப்படும் கட்டுரைத் தலைப்புகளுக்கு ஏற்ற கருத்துகளைத் தெளிவாகவும் விரிவாகவும் பொருத்தமான எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தியும் கருத்து வளர்ச்சியுடன் எழுதுதல்

- சிறந்த மொழிநடையில் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்வளத்தையும் வாக்கிய வகைகளையும் பயன்படுத்திக் கருத்துகளை நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சியுடன் எழுதுதல்

### 2.6 எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்

- மின்னஞ்சல், கருத்துக்களம் ஆகிய வடிவங்களில் அமைந்த தலைப்புக்கு ஏற்ற கருத்துகளைத் தெளிவாகவும் விரிவாகவும் பொருத்தமான எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தியும் கருத்து வளர்ச்சியுடன் எழுதுதல்
- இலக்கணத்தையும் மொழியமைப்பையும் பொருத்தமுறப் பயன்படுத்திக் கருத்துகளை நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சியுடன் எழுதுதல்

# 3 தேர்வு அமைப்புமுறை

உயர்தமிழ்த் தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

## வினாத்தாள் 1: கட்டுரை

**(2 மணி நேரம், 80 மதிப்பெண்கள், 40%)**

இத்தாள் 'அ', 'ஆ' என்னும் இரு பிரிவுகளை உள்ளடக்கியது. இப்பிரிவிலுள்ள வினாக்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தமிழ் அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம்.

**'அ' பிரிவு: நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்பு (மின்னஞ்சல், கருத்துக்களம்)**

இப்பிரிவில் மின்னஞ்சல் (அலுவல் சார்ந்தது), கருத்துக்களம் (அலுவல் சாராதது) ஆகிய வடிவங்களில் அமைந்த இரண்டு வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 130 சொற்களுக்குக் குறையாமல் விடையளித்தல் வேண்டும். பொருள், மொழி, அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுபவரின் படைப்பு மதிப்பிடப்படும்.

**'ஆ' பிரிவு: கட்டுரை**

இப்பிரிவில் மூன்று கட்டுரைத் தலைப்புகள் இடம்பெற்றிருக்கும். அவற்றுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 300 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுதல் வேண்டும். பொருள், மொழி, அமைப்புமுறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தேர்வெழுதுபவரின் படைப்பு மதிப்பிடப்படும்.

## வினாத்தாள் 2: மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்

**(1 மணி 45 நிமிடங்கள், 80 மதிப்பெண்கள், 40%)**

இத்தாள் 'அ', 'ஆ', 'இ', 'ஈ' ஆகிய நான்கு பிரிவுகளை உள்ளடக்கியது.

**'அ' பிரிவு (முன்னுணர்வுக் கருத்தறிதல், பிழை திருத்தம்)**

இப்பிரிவில் 'முன்னுணர்வுக் கருத்தறிதல்', 'பிழை திருத்தம்' ஆகிய தலைப்புகளில் வினாக்கள் இடம்பெறும். முன்னுணர்வுக் கருத்தறிதல் (சொல்லளவு: 100-110) பனுவலில் ஐந்து கோடிட்ட இடங்கள் இடம்பெறும். தேர்வெழுதுவோர் ஒவ்வொரு கோடிட்ட இடத்திலும் மிகச் சரியான சொல்லை எழுதவேண்டும். பிழை திருத்தம் (சொல்லளவு: 85-95) பனுவலில் பாடத்திட்டத்திலுள்ள இலக்கணக்கூறுகளைச் சோதிக்கும் வகையில் ஐந்து வினாக்கள் இடம்பெறும். தேர்வெழுதுவோர் அப்பனுவலிலுள்ள ஐந்து பிழையான சொற்களைக் கண்டறிந்து அவற்றைத் திருத்திச் சரியான வடிவத்தை எழுதவேண்டும்.

**'ஆ' பிரிவு (சொற்புணர்ச்சி)**

இப்பிரிவில் ஐந்து சொற்புணர்ச்சி வினாக்கள் இடம்பெறும். அவ்வினாக்கள் சொற்களைச் சேர்த்தெழுதுதலாகவோ பிரித்தெழுதுதலாகவோ அமையலாம்.

**'இ' பிரிவு (கருத்தறிதல் 1)**

இப்பிரிவில் ஒரு பனுவலையொட்டி (சொல்லளவு: 245-255) மூன்று தெரிவுவிடை வினாக்கள், ஓர் இலக்கண வினா, ஒரு சுருக்கி வரைதல் வினா ஆகியவை இடம்பெறும்.

**'ஈ' பிரிவு (கருத்தறிதல் 2)**

இப்பிரிவில் ஒரு பனுவலையொட்டி (சொல்லளவு: 245-255) ஐந்து சுயவிடை வினாக்கள் இடம்பெறும். அவற்றுள் ஒன்று சொற்பொருளையொட்டி அமையும். சொற்பொருள் வினாவில் இடம்பெறும் நான்கு சொற்களுக்கு இடம்நோக்கிப் பொருள் கூறுதல் வேண்டும்.

## <u>வினாத்தாள் 3: வாய்மொழி</u>

**(10 – 15 நிமிடங்கள், 40 மதிப்பெண்கள், 20%)**

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது. அவை வாய்மொழிப் படைப்பு, வாய்மொழிப் படைப்பையொட்டிய கருத்துரையாடல் என்பன.

**1. வாய்மொழிப் படைப்பு**
**(20 மதிப்பெண்கள், 10%)**

இப்பகுதியில் தேர்வுக்கு அமர்பவர் ஒளிக்காட்சியைப் பார்ப்பதற்கும் தலைப்பையொட்டி 2 நிமிடங்களுக்கு மிகாத படைப்பைத் தயார் செய்துகொள்வதற்கும் 10 நிமிடங்கள் வழங்கப்படும். தேர்வுக்கு அமர்பவர் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பைப் படித்துவிட்டு அதனையொட்டி அமைந்த ஒளிக்காட்சி ஊக்கக்கூறு ஒன்றைப் பார்க்கவேண்டும். அதனைத் தொடர்ந்து, தேர்வுக்கு அமர்பவர் தம் படைப்பை 2 நிமிடங்களுக்கு மிகாமல் படைக்கவேண்டும். கருத்து (கருத்துப் பொருத்தம், கருத்தமைப்பு மற்றும் கருத்து வளர்ச்சி), மொழிப் பயன்பாடு (சரளம், சொல்வளம் மற்றும் தெளிவான பேச்சு) ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வுக்கு அமர்பவரின் படைப்பு மதிப்பிடப்படும்.

**2. வாய்மொழிப் படைப்பையொட்டிய கருத்துரையாடல்**
**(20 மதிப்பெண்கள், 10%)**

தேர்வுக்கு அமர்பவர் தாம் படைத்த படைப்பையொட்டித் தேர்வாளரோடு கருத்துரையாடலில் ஈடுபடவேண்டும். கருத்துரையாடல் தொடர்ச்சியாக நடைபெறுவதற்குத் தேர்வுக்கு அமர்பவரிடம் தூண்டுதல் வினாக்கள் கேட்கப்படும். கேட்கப்படும் வினாக்கள் வாய்மொழிப் படைப்பை அடிப்படையாகக்கொண்டும் கருத்துரையாடலின்போது தேர்வுக்கு அமர்பவர் கூறும் கருத்துகளையொட்டியும் அமையும். கருத்துரையாடலில் ஈடுபாடு, கருத்துத் தெளிவு, கருத்துகளை நியாயப்படுத்துதல், மொழிப் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வுக்கு அமர்பவரின் கருத்துரையாடல் மதிப்பிடப்படும்.

# 4 தேர்வு விவர அட்டவணை

**2024-ஆம் ஆண்டுமுதல் அமல்படுத்தப்படும் சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வு உயர்தமிழ் (1147)**

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1<br>(2 மணி) | <u>கட்டுரை</u> | | | **(40%)<br>80** |
| | <u>'அ' பிரிவு</u><br>நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்பு – மின்னஞ்சல்/ கருத்துக்களம்<br>(130 சொற்களுக்குக் குறையாமல்) | சுயவிடை | 2<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | (10%)<br>20 |
| | <u>'ஆ' பிரிவு</u><br>கட்டுரை<br>(300 சொற்களுக்குக் குறையாமல்)<br>வகைகள்:<br>• நிகழ்வு<br>• விளக்கம்<br>(கருத்துரை, விவாதம்)<br>(சிற்றுரை வடிவிலும் அமையலாம்) | சுயவிடை | 3<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | (30%)<br>60 |
| 2<br>(1 மணி 45 நிமிடங்கள்) | <u>மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்</u> | | | **(40%)<br>80** |
| | <u>'அ' பிரிவு</u><br>A1 முன்னுணர்வுக் கருத்தறிதல் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 5 | (5%)<br>10 |
| | A2 பிழை திருத்தம் | பிழைகளைத் திருத்தி எழுதுதல் | 5 | (5%)<br>10 |
| | <u>'ஆ' பிரிவு</u><br>B3 சொற்புணர்ச்சி | சுயவிடை | 5 | (5%)<br>10 |

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 2<br>(1 மணி 45 நிமிடங்கள்) | <u>மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்</u><br><br><u>'இ' பிரிவு</u><br>C4 கருத்தறிதல் 1 | <br><br><br><br>தெரிவுவிடை,<br>சுயவிடை<br>(இலக்கண வினா, சுருக்கி வரைதல்) | <br><br><br><br>3<br><br>1<br>1 | <br><br><br><br>(3%)<br>6<br>(2%)<br>4<br>(6%)<br>12 |
| | <u>'ஈ' பிரிவு</u><br>C5 கருத்தறிதல் 2 | <br>சுயவிடை<br>(சொற்பொருள் உட்பட) | <br>5 | <br>(14%)<br>28 |
| 3<br>(10 -15 நிமிடங்கள்) | <u>வாய்மொழி</u><br><br>• ஒளிக்காட்சியையொட்டிய வாய்மொழிப் படைப்பு<br><br>• வாய்மொழிப் படைப்பையொட்டிய கருத்துரையாடல் | <br><br>சுயவிடை<br><br><br>சுயவிடை | <br><br>1<br><br><br>1 | **(20%)**<br>**40**<br>(10%)<br>20<br><br>(10%)<br>20 |

## பிழை திருத்தம்
## தேர்வில் சோதிக்கப்படவிருக்கும் இலக்கணக்கூறுகள்

| | |
|---|---|
| **எழுத்து வகைகள்** | • குறில், நெடில்<br>• ஏகார, ஓகார எழுத்துகள் கொண்ட சொற்கள்<br>• இனவெழுத்து |
| **சொல் வகைகள்** | • வினாப்பெயர்<br>• சுட்டுப்பெயர், பதிலிடுபெயர்<br>• தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று |
| **தொடர் அமைப்பு** | • இயைபு - எழுவாய், பயனிலை முதற்கொண்டு திணை, பால், எண் இடம், காலம் முதலான ஏனைய இலக்கணக்கூறுகளையும் உள்ளடக்கும்<br>• வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், உடன், ஓடு, கு, அது, உடைய, இல், இன், இடம், இலிருந்து, இடமிருந்து)<br>• பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம்<br>• வினையெச்சம், எதிர்மறை வினையெச்சம்<br>• குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம்<br>• வினையாலணையும் பெயர்<br>• இருதிணைப் பொதுப்பெயர்<br>• இணைப்புச் சொல்<br>(உம், ஆனால், அதனால், அப்போது, எனவே, ஆகவே, ஆகையால், ஆதலால், எனினும், இருப்பினும், இருந்தபோதிலும்)<br>• உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று<br>• செய்வினை, செயப்பாட்டுவினை<br>• தன்வினை, பிறவினை |
| **சொல் பயன்பாடு** | • ஒலி வேறுபாட்டுச் சொற்கள்<br>• ஒரு, ஓர், சில, சிலர், பல, பலர் |
| | • நிரல் அல்லது வரிசை உணர்த்தும் சொற்கள்: முதலில், அடுத்து, பிறகு, மேலும், முன், பின் |

*இந்த இலக்கணக்கூறுகளின் பட்டியல் 2021-ஆம் ஆண்டு அமலாக்கம் செய்யப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டத்தை (பக்கங்கள் 56-59) அடியொற்றி உருவாக்கப்பட்டுள்ளது.

## கருத்தறிதல் 1: இலக்கண வினா
## தேர்வில் சோதிக்கப்படவிருக்கும் இலக்கணக்கூறுகள்

| | |
|---|---|
| **எழுத்து வகைகள்** | • குற்றியலுகரம், முற்றியலுகரம் |
| **சொல் வகைகள்** | • பெயர்ச்சொல் (அறுவகைப்பெயர்)<br>• வினாப்பெயர்<br>• சுட்டுப்பெயர், பதிலிடுபெயர்<br>• தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று |
| **தொடர் அமைப்பு** | • எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்<br>• வேற்றுமை உருபுகள் (ஐ, ஆல், உடன், ஓடு, கு, அது, உடைய, இல், இன், இடம், இலிருந்து, இடமிருந்து)<br>• வேற்றுமைத் தொகை<br>• பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்<br>• வினையெச்சம், எதிர்மறை வினையெச்சம்<br>• குறிப்புப் பெயரெச்சம், குறிப்பு வினையெச்சம்<br>• வினையாலணையும் பெயர்<br>• இருதிணைப் பொதுப்பெயர்<br>• ஆகுபெயர்<br>• உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று<br>• செய்வினை, செயப்பாட்டுவினை<br>• தன்வினை, பிறவினை<br>• செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை<br>• வியங்கோள் வினைமுற்று |
| **சொல் பயன்பாடு** | • இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர் |

*இந்த இலக்கணக்கூறுகளின் பட்டியல் 2021-ஆம் ஆண்டு அமலாக்கம் செய்யப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டத்தை (பக்கங்கள் 56-59) அடியொற்றி உருவாக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வு
## உயர்தமிழ்

## நடைமுறை சார்ந்த எழுத்துப் படைப்புக்குரிய மதிப்பீட்டுத் திட்டம்
## (20 மதிப்பெண்கள்)

பொருள் (10 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண்கள் | **9-10** | **6-8** | **3-5** | **1-2** |
| கருத்துப் பொருத்தம் | ▪ முழுதும் பொருத்தமான கருத்துகள் | ▪ பெரும்பாலும் பொருத்தமான கருத்துகள் | ▪ ஓரளவு பொருத்தமான கருத்துகள் | ▪ மிகச் சில பொருத்தமான கருத்துகள் |
| கருத்து வளர்ச்சி | ▪ மிகத் தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ பல இடங்களில் கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ கருத்துகள் தெளிவற்று இருத்தல்; கூறியது கூறல் இடம்பெற்றிருத்தல் |

மொழியும் அமைப்புமுறையும் (10 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண்கள் | **9-10**<br>(மிகச் சிறந்த மொழித்திறன்) | **6-8**<br>(சிறந்த மொழித்திறன்) | **3-5**<br>(சராசரி அல்லது அதற்கும் கீழ்நிலையிலான மொழித்திறன்) | **1-2**<br>(மொழித்திறன் மோசமாக இருத்தல்) |
| **இலக்கணமும் மொழியமைப்பும்** | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகள் இன்மை; மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் சில பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பல பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் மலிந்திருத்தல் |
| **கருத்து வெளிப்பாடு** | ▪ கருத்துகளைத் தெளிவாக விளக்கப் பொருத்தமான, பலதரப்பட்ட சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ கருத்துகளை விளக்கப் பொருத்தமான சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ எளிய சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல்; பல இடங்களில் கருத்துகள் தெளிவற்று இருத்தல் | ▪ மொழிப் பிழைகளினால் கருத்துகளைப் புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு இருத்தல் |
| **கருத்துத் தொடர்ச்சி** | ▪ பத்தியிலும் பத்திகளுக்கிடையிலும் மிக நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியிலும் பத்திகளுக்கிடையிலும் பெரும்பாலும் நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியளவில் ஓரளவு நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ கருத்துத் தொடர்ச்சி இல்லாதிருத்தல் |

## சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வு
## உயர்தமிழ்

## கட்டுரைக்குரிய மதிப்பீட்டுத் திட்டம்
## (60 மதிப்பெண்கள்)

பொருள் (30 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 | வகை 5 |
|---|---|---|---|---|---|
| மதிப்பெண்கள் | **25-30** | **19-24** | **13-18** | **7-12** | **1-6** |
| **கருத்துப் பொருத்தம்** | ▪ முழுதும் பொருத்தமான கருத்துகள் | ▪ பெரும்பாலும் பொருத்தமான கருத்துகள் | ▪ போதிய அளவு பொருத்தமான கருத்துகள் | ▪ ஓரளவு பொருத்தமான கருத்துகள் | ▪ மிகச் சில பொருத்தமான கருத்துகள் |
| **கருத்து வளர்ச்சி** | ▪ மிகத் தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ ஓரளவு தெளிவான கருத்து வளர்ச்சி | ▪ பல இடங்களில் கருத்து வளர்ச்சி இல்லாதிருத்தல் | ▪ கருத்துகள் தெளிவற்று இருத்தல்; கூறியது கூறல் இடம்பெற்றிருத்தல் |

மொழியும் அமைப்புமுறையும் (30 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 | வகை 5 |
|---|---|---|---|---|---|
| மதிப்பெண்கள் | **25-30**<br>மிகச் சிறந்த மொழித்திறன் | **19-24**<br>சிறந்த மொழித்திறன் | **13-18**<br>சராசரி மொழித்திறன் | **7-12**<br>சராசரிக்கும் கீழ்நிலையிலான மொழித்திறன் | **1-6**<br>மொழித்திறன் மோசமாக இருத்தல் |
| **இலக்கணமும் மொழியமைப்பும்** | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகள் இன்மை; மிகச் சில இடறல்கள் அல்லது சிறு பிழைகள் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகளைவிடச் சிறு பிழைகள் அதிகம் இருத்தல் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் சிறு பிழைளைவிடப் பெரும் பிழைகள் அதிகம் இருத்தல் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் அதிகம் இருத்தல் | ▪ எழுத்து, சொல், தொடரமைப்பு, சொல்லாட்சி, நிறுத்தற்குறி ஆகியவற்றில் பெரும் பிழைகளும் சிறு பிழைகளும் மலிந்திருத்தல் |
| **கருத்து வெளிப்பாடு** | ▪ கருத்துகளைத் தெளிவாக விளக்கப் பொருத்தமான, பலவகையான சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ கருத்துகளை விளக்கப் பொருத்தமான சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ கருத்துகளை விளக்க ஓரளவு பொருத்தமான சொல்லாட்சியையும் எளிய வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல் | ▪ எளிய சொல்லாட்சியையும் வாக்கிய அமைப்புகளையும் பயன்படுத்தியிருத்தல்; பல இடங்களில் கருத்துகள் தெளிவற்று இருத்தல் | ▪ மொழிப் பிழைகளினால் கருத்துகளைப் புரிந்துகொள்வதில் இடர்ப்பாடு இருத்தல் |
| **கருத்துத் தொடர்ச்சி** | ▪ பத்தியிலும் பத்திகளுக்கு இடையிலும் மிக நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியிலும் பத்திகளுக்கு இடையிலும் பெரும்பாலும் நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியிலும் பத்திகளுக்கு இடையிலும் ஓரளவு நிரல்பட அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ பத்தியளவில் மட்டும் ஓரளவு அமைந்த கருத்துத் தொடர்ச்சி | ▪ கருத்துத் தொடர்ச்சி இல்லாதிருத்தல் |

## சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரணநிலைத் தேர்வு (உயர்தமிழ்)
## வாய்மொழித் தேர்வு மதிப்பீட்டுத் திட்டம் (40 மதிப்பெண்கள்)

வாய்மொழிப் படைப்பு (20 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| **மதிப்பெண் பரப்பெல்லை** | **11 – 14** | **7 – 10** | **4 – 6** | **1 – 3** |
| வாய்மொழிப் படைப்பு<br><br>பொருத்தம், அமைப்பு மற்றும் கருத்து வளர்ச்சி **(14 மதிப்பெண்கள்)** | ▪ கருத்துகளைச் சிறப்பான முறையில் விரிவாகவும் முக்கியக் கூறுகளை விளக்கியும் எடுத்துரைத்தல்<br>▪ கருத்துகளும் கருத்துரைப்பும் மிகப் பொருத்தமாகவும் நிரல்படவும் அமைந்திருத்தல்<br>▪ கருத்துகளும் கருத்துரைப்பும் மிகச் சிறந்த சான்றுகளுடன் அமைந்திருத்தல் (ஒளிக்காட்சியில் இடம்பெற்றுள்ள முக்கியத் தகவல்களையும் உள்ளடக்கியிருத்தல்) | ▪ கருத்துகளை விரிவாகவும் சில முக்கியக் கூறுகளை விளக்கியும் எடுத்துரைத்தல்<br>▪ கருத்துகளும் கருத்துரைப்பும் பொருத்தமாகவும் நிரல்படவும் அமைந்திருத்தல்<br>▪ கருத்துகளும் கருத்துரைப்பும் சிறந்த சான்றுகளுடன் அமைந்திருத்தல் (ஒளிக்காட்சியில் இடம்பெற்றுள்ள முக்கியத் தகவல்களையும் உள்ளடக்கியிருத்தல்) | ▪ கருத்துகளை ஓரளவு விரிவாக விளக்குவதோடு முக்கியக் கூறுகளை எடுத்துரைக்க ஓரளவு முயற்சியும் செய்தல்<br>▪ கருத்துகளும் கருத்துரைப்பும் ஓரளவு நிரல்பட அமைந்திருத்தல்<br>▪ கருத்துகளும் கருத்துரைப்பும் சான்றுகளுடன் அமைந்திருத்தல் (ஒளிக்காட்சியில் இடம்பெற்றுள்ள சில முக்கியத் தகவல்களையும் உள்ளடக்கியிருத்தல்) | ▪ கருத்துகளை விளக்குவதோடு ஓரளவு கருத்துரைப்பு அல்லது கருத்துரைப்பே இல்லாத நிலை<br>▪ கருத்துகளும் கருத்துரைப்பும் பொருத்தமாகவும் நிரல்படவும் அமையாதிருத்தல்<br>▪ கருத்துகளைப் பெரும்பாலும் சான்றுகளுடன் படைக்கத் தவறுதல் |

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண் பரப்பெல்லை | **6** | **4 – 5** | **2 – 3** | **1** |
| **மொழிப் பயன்பாடு**<br>சரளமும் தெளிவும்<br>**(6 மதிப்பெண்கள்)** | ▪ பேச்சு முழுவதும் தெளிவாகவும் சரளமாகவும் இருத்தல்<br>▪ மிகச் சிறந்த உச்சரிப்பும் தொனியும் கொண்ட பேச்சு<br>▪ சிறந்த சொல்வளமும் தொடர்களும் கொண்ட மொழியைப் பயன்படுத்துதல் | ▪ பேச்சு பெரும்பாலும் தெளிவாகவும் சரளமாகவும் இருத்தல்<br>▪ சிறந்த உச்சரிப்பும் தொனியும் கொண்ட பேச்சு<br>▪ போதுமான அளவு பொருத்தமான சொல்வளமும் தொடர்களும் கொண்ட மொழியைப் பயன்படுத்துதல் | ▪ சற்றுத் தயக்கத்தோடு ஆனால் தெளிவாகப் பேசுதல்<br>▪ சில பிழைகளுடன் அமைந்த உச்சரிப்பும் தொனியும் கொண்ட பேச்சு<br>▪ அடிப்படை மொழிக்கூறுகளைப் பயன்படுத்துவதோடு பொருத்தமற்ற சொல்வளத்தையும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் | ▪ நிறுத்தி நிறுத்திப் பேசுதல்; பேச்சைப் புரிந்துகொள்வதில் சிரமம் ஏற்படுதல்<br>▪ அதிகமான பிழைகளுடன் அமைந்த உச்சரிப்பும் தொனியும் கொண்ட பேச்சு<br>▪ மிகக் குறைந்த அளவு மொழியைப் பயன்படுத்துதல் அல்லது பொருத்தமற்ற சொல்வளத்தையும் மிகவும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் |

வாய்மொழிப் படைப்பையொட்டிய கருத்துரையாடல் (20 மதிப்பெண்கள்)

| வகை | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 |
|---|---|---|---|---|
| மதிப்பெண் பரப்பெல்லை | **11 – 14** | **7 – 10** | **4 – 6** | **1 – 3** |
| **கருத்துரையாடல்**<br>கருத்துரையாடலில் பங்கு பெறுதல்<br>**(14 மதிப்பெண்கள்)** | ▪ அதிக ஈடுபாட்டுடன் உரையாடுதல்<br>▪ கருத்துகளை மிகத் தெளிவாக எடுத்துரைத்தல்<br>▪ சிறந்த எடுத்துக்காட்டுகளுடன் கருத்துகளை நியாயப்படுத்துதல் | ▪ ஈடுபாட்டுடன் உரையாடுதல்<br>▪ கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைத்தல்<br>▪ போதிய எடுத்துக்காட்டுகளுடன் கருத்துகளை நியாயப்படுத்துதல் | ▪ சிறிதளவு ஈடுபாட்டுடன் உரையாடுதல்<br>▪ கருத்துகளை ஓரளவு தெளிவாக எடுத்துரைத்தல்<br>▪ சில எடுத்துக்காட்டுகளுடன் கருத்துகளை நியாயப்படுத்துதல் | ▪ குறைந்த ஈடுபாட்டுடன் உரையாடுதல்; தொடர்ச்சியான தூண்டுதல் தேவைப்படுதல்<br>▪ கருத்துகளை முரண்பாட்டுடன் எடுத்துரைத்தல்<br>▪ பெரும்பாலும் முரண்பாடான எடுத்துக்காட்டுகளுடன் அமைந்த கருத்துகள், கருத்துகளை நியாயப்படுத்த இயலாத நிலை |
| மதிப்பெண் பரப்பெல்லை | **6** | **4 – 5** | **2 – 3** | **1** |
| **மொழிப் பயன்பாடு**<br>சரளமும் தெளிவும்<br>**(6 மதிப்பெண்கள்)** | ▪ பேச்சு முழுவதும் தெளிவாகவும் சரளமாகவும் இருத்தல்<br>▪ மிகச் சிறந்த உச்சரிப்பும் தொனியும் கொண்ட பேச்சு<br>▪ சிறந்த சொல்வளமும் தொடர்களும் கொண்ட மொழியைப் பயன்படுத்துதல் | ▪ பேச்சு பெரும்பாலும் தெளிவாகவும் சரளமாகவும் இருத்தல்<br>▪ சிறந்த உச்சரிப்பும் தொனியும் கொண்ட பேச்சு<br>▪ போதுமான அளவு பொருத்தமான சொல்வளமும் தொடர்களும் கொண்ட மொழியைப் பயன்படுத்துதல் | ▪ சற்றுத் தயக்கத்தோடு ஆனால் தெளிவாகப் பேசுதல்<br>▪ சில பிழைகளுடன் அமைந்த உச்சரிப்பும் தொனியும் கொண்ட பேச்சு<br>▪ அடிப்படை மொழிக்கூறுகளைப் பயன்படுத்துவதோடு பொருத்தமற்ற சொல்வளத்தையும் எளியதொடர்களையும் பயன்படுத்துதல் | ▪ நிறுத்தி நிறுத்திப் பேசுதல்; பேச்சைப் புரிந்துகொள்வதில் சிரமம் ஏற்படுதல்<br>▪ அதிகமான பிழைகளுடன் அமைந்த உச்சரிப்பும் தொனியும் கொண்ட பேச்சு<br>▪ பொருத்தமற்ற சொல்வளத்தையும் மிகவும் எளிய தொடர்களையும் பயன்படுத்துதல் |